# திகைக்கவைக்கும் 'தேசப் பொக்கிஷம்'

மகாத்மா காந்திஜிக்கு உலக நாடுகள் மலைக்கவைக்கும் அளவுக்கு சிலைகள் மூலம் கவுரவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. 80–க்கும் மேற்பட்ட நாடுகள், 200–க்கும் மேற்பட்ட சிலைகளை காந்திஜிக்காக நிறுவி உள்ளன. நாளுக்கு நாள் அவரது புகழ் உலகில் பரவிக்கொண்டிருப்பதால், தொடர்ந்து அவர் சிலைகள் நிறுவப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கடந்த பத்தாண்டுகளில் 80–க்கு மேற்பட்ட சிலைகள், 50–க்கு மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 20 நாடுகள் இந்தியாவுக்கு புதிய சிலைகளுக்கான ஆர்டரை தந்துவிட்டு, டெலிவரி பெற்று சிலைகளை நிறுவ ஆவலோடு காத்திருக்கின்றன. 2013–க்குள் நூறு நாடுகளில் காந்திஜியின் சிலை கவுரவத்தோடு தலை நிமிர்ந்து நிற்கும்.

காந்திஜியின் சிலைகளை உலக நாடுகளுக்கு வடிவமைத்து கொடுப்பது, 'ஐ.சி.சி.ஆர்' (இந்தியன் கவுன்சில் பார் கல்ச்சுரல் ரிலேஷன்ஸ்) என்ற அமைப்பு. சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்த மவுலானா அபுல்கலாம் ஆசாத்தால் 1950–ம் ஆண்டு இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. வெளிநாடுகளில் இந்தியாவின் கலை, கலாசாரத்தை மேம்படுத்தும் பணியை இந்த அமைப்பு செய்துவருகிறது. உலகநாடுகள் பெரும்பாலும் இந்த அமைப்பு மூலம்தான் காந்திஜியின் சிலைகளை வடிவமைத்து பெறுகின்றன. இந்திய சிற்பிகள் அவைகளை வடிவமைத்து தருகிறார்கள்.

வெளிநாடுகளில் இடம்பெற்றிருக்கும் காந்தி சிலைகளில் ஏராளமானவற்றை வடிவமைத்தவர், ராம் சுதர் என்ற சிற்பி. ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் தன் கலை வண்ணத்தை, காந்திஜி மூலம் வெளிப்படுத்தி இருக்கும் இவர், மராட்டிய மாநிலத்தில் பிறந்தவர். கவுதம் பால் என்ற சிற்பி வடித்த சிலைகள் 15–க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ளன.



காந்திஜிக்காக முதன் முதலில் சிலையை நிறுவிய வெளிநாடு, கென்யா. நைரோபியில் உள்ள 'கென்யா ராயல் தொழில்நுட்ப கல்லூரி'யில் 1956–ம் ஆண்டு அந்த சிலை திறந்துவைக்கப் பட்டது.



இது அமெரிக்காவில் உள்ள கொலம்பஸ் கலைக்கல்லூரியில் நிறுவப்பட்டிருக்கும் சிலை. காந்திஜி ராஜ தோரணையில் இருக்கையில் இருப்பது போன்று இந்த சிலை உள்ளது. இதுபோன்ற சிலை வேறு எங்கும் இல்லை.

தன் வாழ்நாளில் ஒருமுறைகூட அமெரிக்கா செல்லாத காந்திஜிக்கு, அங்கு 40–க்கும் மேற்பட்ட சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. அமெரிக்காவின் முக்கிய தலைவர்களுக்குகூட இவ்வளவு எண்ணிக்கையில் சிலைகள் அங்கு நிறுவப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



சீனாவில் அமைக்கப் பட்டுள்ள காந்திஜி சிலை



இரண்டாவது சிலை 1968–ல் இங்கிலாந்தில் உள்ள தவிஸ்டோக் ஸ்கொயர் என்ற அமைதிப் பூங்காவில் நிறுவப்பட்டது. காந்திஜி 1890–களில் இந்த பூங்காவின் அருகில் உள்ள கல்லூரியில் தான் சட்டம் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



பெரும்பாலான நாடுகள் காந்திஜியின் வயதான தோற்ற சிலைகளைத்தான் நிறுவி இருக்கின்றன. அதிலிருந்து மாறுபட்டு வக்கீல் உடையில் அவரது இளம் வயது தோற்றத்தை தென்னாப்பிரிக்க அரசு ஜோகன்னஸ்பர்க்கில் 2003–ம் ஆண்டு நிறுவியுள்ளது.



படத்தில் காணும் சிலை டென்மார்க்கில் உள்ளது. தமிழ்நாட்டுடன் தொடர்புடைய வரலாறு இந்த சிலையுடன் பின்னிப் பிணைந்துள்ளது. 1921–ம் ஆண்டு காந்திஜி சுற்றுப்பயணமாக தமிழ்நாட்டுக்கு வந்தார். அப்போது மதுரையில் ஏழை விவசாயிகள் இடுப்பில் மட்டும் வெறும் துண்டோடு விவசாய பணிகளை மேற்கொள்வதைக்கண்டார். 'இப்படிப்பட்ட ஏழைகள் நிறைந்த நாட்டில் எனக்கு மட்டும் பல துணிகள் எதற்கு?' என்று சிந்தித்த அவர், உடனே தானும் அதுபோன்று இடுப்பு துணியோடு தோன்றத் தொடங்கினார். அப்படியே வாழ்ந்தார். அதுவே காந்திஜிக்கான உலக அடையாளமாக மாறியது. அவரது உடை மாற்றம் நடந்த அன்று எடுக்கப்பட்டதுதான் முதல் போட்டோ. அந்த படத்தை தழுவி உருவாக்கப்பட்ட டென்மார்க் சிலை அருகில் உள்ளது. இந்த சிலையை 1984–ம் ஆண்டு இந்திரா காந்தி, டென்மார்க் அரசுக்கு பரிசாக வழங்கினார்.





காந்திஜி எளிமையான உடைக்கு மாறிய பிறகு எடுக்கப்பட்ட முதல் புகைப்படமும், அவரது உடை மாற்றத்தை தழுவி டென்மார்க்கில் அமைக்கப்பட்டுள்ள காந்திஜியின் சிலையும்.

மிக உயரமான, அதிக எடை கொண்ட காந்திஜி சிலை ஒன்று பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் அமைய உள்ளது. 40 அடி உயரம், 25 டன் எடையில் அந்த வெண்கல சிலை தயாராகிறது. பீகார் அரசு அதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. இதனை பிரபல சிற்பி ராம் சுதரின் மகன் அனில் சுதர் வடிவமைத்து வருகிறார்.

அன்பு, அகிம்சைக்கு உலக அடையாளமே காந்திஜிதான் என்பதை, உலகம் முழுக்க அமைந்திருக்கும் அவரது சிலைகள் உலகிற்கு உணர்த்துகின்றன.

ரஷியாவின் மாஸ்கோ நகரில் நிறுவப்பட்டுள்ள மகாத்மாவின் உருவச் சிலை.

கம்யூனிஸ்ட்டு நாடுகளான சீனா, ரஷியா, கியூபாவிலும் காந்திஜிக்கு சிலைகளை நிறுவியுள்ளார்கள். ரஷியாவில் 3 இடங்களில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது.



(சிலை படங்கள், தகவல்கள் தொகுப்பு: கும்மிடிப்பூண்டி எம்.எல்.ராஜேஷ்)

நிறைவடைந்தது.